செங்கை அரசு மருத்துவமனையில் மார்ச்.1 அன்று பிறந்த

19 குழந்தைகளுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தங்க மோதிரம் அணிவித்து தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார்!

கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த 19 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து தாய்மார்களுக்கு பழங்கள் மற்றும் ஊட்டச்சத்து தொகுப்புகளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குரு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், நகரமன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், நகர மன்ற துணைத் தலைவர் க.அன்புச்செல்வன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

காஞ்சிபுரம், மார்ச் 3 - முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை யொட்டி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் மார்ச்.1அன்று பிறந்த 19 குழந்தைகளுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தங்க மோதிரம் அணிவித்து தமிழ் பெயர்களை சூட்டி மகிழ்ந்தார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை யொட்டி செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மார்ச்.1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கும் உன்னத நிகழ்ச்சி நேற்று பகல் நடைபெற்றது.

தமிழக குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று,

மார்ச் 1அன்றுபிறந்த 19 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தார். அக்குழந்தைகளின் பெற்றோர்களிடம் அழகிய தமிழ் பெயர் சூட்டுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

அவர்களின் 4 பெற்றோர்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களையே பெயர் சூட்டும்படி கேட்டுக் கொண்டனர்.

ஆற்காட்டை சேர்ந்த பிரேம்குமார் - ஜீவா தம்பதியினரின் ஆண் குழந்தைக்கு தமிழ்வேந்தன் என்ற பெயரையும், வந்தவாசி வட்டம் வீரம்பாக்கம் புதூரை சேர்ந்த கார்த்திக் - பிரேமா தம்பதியரின் ஆண் குழந்தைக்கு பொற்செல்வன் என்ற பெயரையும், தென்னேரியை சேர்ந்த பிரபு - அனுசுயாதம்பதியரின்ஆண் குழந்தைக்கு தமிழரசன் என்ற பெயரையும், வாலாஜாபாத் வட்டம் திம்மையன்பேட்டையை சேர்ந்த யுவராஜ் - மோகனாதம்பதியரின்ஆண் குழந்தைக்கு கதிரவன் என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தார்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், செங்கை நகரமன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், நகர மன்ற துணைத் தலைவர் க.அன்புச்செல்வன், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எல்.இதயவர்மன், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆர்.தசரதன், மாவட்ட மகளிர் அணி மீராசபாபதி, கே.சந்தியா, கலாவதி மூர்த்தி, செங்கை நகர நிர்வாகிகள் சி.கே.வி. கிருஷ்ணமூர்த்தி சேட்டு, சிவப்பிரகாசம், சுரேஷ், கே.ஜி.சந்தோஷ் கண்ணன், ஐ.மகேஷ், மோகன், கிறிஸ்டோபர், இர்பான், அசோக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உதவியாளர் கோ. சண்முகநாதன் அவர்களின் சகோதரர் கோ. கருணாநிதி அவர்களின் இளைய புதல்வர் கே.விஜயன் கடந்த 25 ம் தேதி உடல்நலக் குறைவால் காலமானார். அவரது படத்திறப்பு நிகழ்ச்சி நேற்று (02.03.25) சென்னை அசோக் நகரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் மா.சுப்ரமணியம் திமுக தலைமை நிலைய செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவருமான புச்சி எஸ்.முருகன் ஆகியோர் மறைந்த கே.விஜய் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் அஞ்சலியும் மௌன அஞ்சலியும் செலுத்தினார்கள்.

மொழி மிரட்டலும் விரட்டலும்!

‘கணையாழி’ தலையங்கம்!

மொழி என்பது வாழும் மரபு!
மரபின் விழுமியங்களில்
மக்களின் வாழ்க்கை!

மொழி என்பது
தனிமனித அடையாளம் மட்டும் இல்லை;
சமுதாயத்தின் அடையாளம்!
பல்வேறு துறைகளிலும் மக்கள்
வாழ்க்கையை வழிநடத்தும் ஆளுமை!
மாற்ற நெருக்கடிகளில்
உருமாறிக் கொண்டிருக்கும்
இன்றைய உலகத்தில்
முன்பை விடவும் கூடுதலாகத்
தேவைப்படுகிறது மொழி! எனவே
ஒரு மொழியின் இருப்பிலும் சிறப்பிலும்
இருக்கிறது மக்களின் பெருமிதம்!

தமிழ் மொழியின் இருப்பைச்
சிதைக்கவும் குலைக்கவும்
சமுதாய அரசியல் வரலாறு மற்றும்
பண்பாட்டுக் காரணங்களோடு
பொருளாதாரத்தையும் சேர்த்துக்கொண்டு
மிரட்ட வருகிறது புதிய கூட்டணி!

காலனி ஆதிக்க அதிகாரத்தால்
பின்னுக்குத் தள்ளப்பட்ட தமிழ்
வணிகம், தொழில் வேலை வாய்ப்புகள் பெயரில்
உலகமயமாக்கத்தால் பயன்பாட்டளவிலும்
மிரட்டப்பட்டு வருகிறது!.
போதாக்குறைக்கு விடுதலை இந்தியாவில்
அரசியல் கொள்கை பெயரில்
அடக்குமுறை மிரட்டலுக்கும் ஆளாகி வருகிறது!

அறிவு பெற பள்ளிக்கு வரும் குழந்தைகளை
மிரட்ட வரும்போதெல்லாம்
ஓடி ஒளியாமல் தேடிப் பிடித்து
விரட்டி வருகிறது தமிழ்நாடு!

திரை, வானொலி, தொலைக்காட்சி,
சமூக ஊடகங்கள் என்று
எல்லாத் திசைகளிலும் வந்து
எட்டிப்பார்க்கிறது மொழி மிரட்டல்!

நகர்ப்புற வாழ்வுக்குப் புலம்பெயர்கிற போதே
உள் நாட்டிலும் கூட ஒதுக்கி
வைக்கப்பட்டாலும்
பொது வெளிகளில் பெரும்பான்மை மிரட்டலை
எதிர்க்கத் தவறுவதில்லை.
அலுவல் மொழி என்று அதிகாரம் செலுத்தவரும்
ஆக்கிரமிப்பு மிரட்டலை விரட்ட
ஒவ்வொரு நாளும்
அதிகாரப் பகிர்வுக் களத்திலும்
போராடி வருகிறது தமிழ்!

மொழி மிரட்டலில் பயந்து
ஒவ்வொரு ஆண்டும்
செத்துக் கொண்டிருக்கின்றன
உலக மொழிகள் பல!
மொழியின் அழிவு என்பது
ஆயிரக்கணக்கான ஆண்டுகளின்
அறிவு, மரபு, கதைகள்,
தொன்மப் பண்பாட்டு விழுமியச்
சேகரிப்புகளின் அழிவு!

மரபிலிருந்து துண்டிக்கப்படுபவர்கள்
உலகச் சமுதாயப் பங்களிப்பில்
பின்தங்கிப் போவார்கள்!
புறக்கணிக்கப்படுவார்கள்!

விலங்குகளின் மிரட்டலில்
சத்தம் மறைத்து உயிர் காத்த
ஆதி மனித வாழ்க்கையில்
தமிழை நிறுத்தாமல்
விரட்டி விரட்டிப் போய் வேட்டையாடும்
போர்க்கள மொழியாக மாற்றி
இருக்கிறார்கள் தமிழர்கள்!

கணினி, மென்பொருள்,
செயற்கை நுண்ணறிவு என்று
வளர்ந்து வரும்
தொழில் நுட்பங்களை ஏற்கவும்
அடுத்தடுத்தத் தலைமுறைகளும்
பேசவும் எழுதவும் படிக்கவும்
உழைத்து வருகிறார்கள்!
உலகத் தமிழர்கள்!

நிலம், நீர் என்று
உயிர் வளர்ப்பது எல்லாம்
தாய் என்பதால் மொழியும்
தாய்மொழி ஆகிறது!
சூரியன் தவற விட்ட குட்டிநெருப்பை
உயிர்கள் வாழும் நிலமாக மாற்றியது
ஊழிகள் என்றால்
விலங்கை மனிதராக்கி நிலத்தை உலகமாக
மாற்றியிருப்பது மொழி!

சிறுபான்மை பெரும்பான்மை
கணக்கெடுப்பு
தாய் மொழிக்குப் பொருந்தாது!

மொழி உரிமை
மனித உரிமையாகி இருக்கிறது.
சமூக நீதியின் குரலாகவும் இருக்கிறது.
தகவல் பெற மட்டும் இல்லை
கிடைக்கிற தகவலில்
உண்மையைக் கண்டறியவும்
மொழி தேவைப்படுகிறது!

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
மெய்ப்பொருள் காண்பதை மட்டுமே
அறிவு என்கிறார் திருவள்ளுவர்!

இயற்கை ஒலி, உழைப்பு ஒலி,
உணர்ச்சி ஒலி, உடல்மொழி,
சைகை மொழி, கருத்து மொழி என்று
மொழிக்கும் இருக்கிறது பரிணாம வளர்ச்சி.

இயற்கை மொழிச் செயலாக்கம் வழி
கணினிக்கு மொழிகளைக்
கற்றுக்கொடுத்து வருகிறார்கள்!
இனி அவரவர் தாய்மொழியைப்
பிழை இல்லாமல் இணையத்திற்குக்
கற்றுக் கொடுத்தால்
நமக்குப் பதிலாக
அது உலக மொழிகளைக் கற்றுக் கொள்ளும்!
அப்படி மொழி மிரட்டலை
நிரந்தரமாக விரட்ட
வந்துகொண்டிருக்கிறது
செயற்கை நுண்ணறிவு!

ஆனாலும்
இப்போதும் சத்தத்தைக் கொண்டு
விலங்குகளை மிரட்டுவதைப் போல
மொழியைக் கொண்டு
மொழியை மிரட்டுகிறார்கள்!

நிதி என்றும் நிருவாகம் என்றும்
புனிதம் என்றும்
ஒதுக்கி வைக்கிறார்கள்!
தேவ மொழிநீசமொழி என்று
இழிவுபடுத்துகிறார்கள்!
ஒரு மொழியைக் கட்டாயப்படுத்தி
மற்ற மொழிகளைப் புறக்கணிக்கிறார்கள்!

பள்ளிப் பருவத்திலேயே
மிரட்டலை விரட்டத்
திருவாரூரில் அப்போது
களம் அமைத்தார் கலைஞர்!
ஆனால் இப்போதும்
மிரட்டல் நின்றபாடில்லை.

அதனால்
“ஆதிக்க மொழித் திணிப்பைத் தடுத்து
அன்னைத் தமிழைக் காப்பேன்.” என்
என்று
மொழி மிரட்டலை விரட்டத்
தமிழகத்தையே இப்போது
களத்தில் நிறுத்தியிருக்கிற
தமிழ்நாடு முதல்வரைப்
பிறந்த நாளில் வாழ்த்துவோம்!

அன்புடன்
ம.ரா.

நன்றி :
கணையாழி!
மார்ச்
– 2025

வேலூர் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் இனிப்பு வழங்கல்!

வேலூர், மார்ச் 3 - வேலூர் மாநகர திமுக அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ பொது மக்களுக்கு இனிப்பு களை வழங்கினார்.

இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழுதலைவர் மு.பாபு, பொதுக்குழு உறுப்பினர்கள் மா.ப.அன்பு நிதி எஸ்.கதிரேசன்,பகுதி கழக செயலாளர்கள் வி.ஜிகே. சுந்தர விஜி, பாலமுரளி கிருஷ்ணன், சசிக்குமார், எம்.ஏ.கணேஷ்சங்கர், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.முருகன், நீதிமன்ற அருணாசலம், வி.எம்.டி.பாலாஜி, உமா சந்திரன், சீனிவாச காந்தி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் 72 ஆம் ஆண்டு விழா சென்னை வடக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கூல் பாயிண்ட் பி.பிரகாஷ் தலைமையில் எம் ஆர் நகர் சீலம் பேக்கரி அருகில் நடைபெற்றது இவ்விழாவில் 36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஏ ஆர் ஆர் மலைச்சாமி, 36 அ வட்டக் கழகச் செயலாளர் க.பாபு அவர்களும் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்,இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதிகள் ச.சச்சிதானந்தம் புல்லட் எஸ். செபஸ்டின், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,எம் ஆர் டி அப்துல் ரஹ்மான், நா.நடராஜன், டி.வளன்ராஜ், அ.அமலநாதன், இரா.ரவிசங்கர், எஸ்.மகிமை தாஸ், கே.ஆர் பிரபு, பெப்சி சங்கர் இதயவேணி காசி பொற்செழியன், வட்டக்கழக நிர்வாகிகள் க.அரிமூர்த்தி, கே வி சோமசுந்தரம், குணசேகரன்,அந்தோணி சார்லஸ், ஏ.சி.வி.சாமி, சித்திரைப் பெருமாள், டி.அற்புதராஜ், நாராயணன், கல்தூண் முருகன்,கார்த்திக், முருகன், அலெக்ஸ், மெக்கானிக் விநாயகம், மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு முதல்வருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்